அசல் வழக்கு எண்.65/2006 நாள்: 28.04.2026

வா.சா.1 திரு. முருகானந்தம்

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

10) நானும் எனது அப்பாவும் தாவா கோவிலுக்கு பரம்பரை அறங்காவலர்களாக இருந்ததற்கான ஆவணங்கள் எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். என்ன ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் குத்தகை பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி குத்தகை பத்திரம் யார் யாருக்கு எழுதிக் கொடுக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது அப்பா தாவா கோவிலில் பரம்பரை அறங்காவலர் பணி செய்யாததற்கு என்ன காரணம் என்றால் எனது அப்பதான் தொடர்ந்து அறங்காவலர் பணி செய்து வந்தார். எனது அப்பா காலத்தில் தாவா கோவிலுக்கு கும்பாபிஷேகம் செய்தோமா என்றால் இல்லை. எனது அப்பா காலத்தில் தாவா கோவிலுக்கு எத்தனை கால பூஜை நடக்கும் என்றால் இரண்டு கால பூஜை நடக்கும்.

11) தாவா கோவிலுக்கு யார் பூஜை செய்வார் என்றால் எனது ம.சுப்ரமணியன் செய்வார். எனது அப்பா தொழுநோயால் பாதிக்கப்பட்டதால் இந்த பரம்பரை அறங்காவல் பணியை எப்போதும் செய்தது கிடையாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு எதிராக நான் தான் அறங்காவலர் என்று இந்து சமய அறநிலையத்துறையினரிடம் மனு கொடுத்தேனா என்றால் கொடுத்துள்ளேன். அவ்வாறு மனு கொடுத்ததற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால ஞாபகம் இல்லை. வசந்தா எனக்கு என்ன உறவு வேண்டும் என்றால் அத்தைமுறை ஆகும். மேற்படி வசந்தா என்பவரும் மருதமுத்து வாரிசுதான் என்றால் சரிதான். நான் கேட்கும் பரம்பரை அறங்காவலர் உரிமை மேற்படி வசந்தா என்பவருக்கும் உண்டு என்றால் சரிதான்.

12) ஏன் வசந்தாவை வாதியாக சேர்க்காமல் பிரதிவாதியாக சேர்த்தோம் என்றால் அப்போது மனவருத்தம் இருந்ததால் பிரதிவாதியாக சேர்த்தோம். 1–ம் பிரதிவாதி வெளியூர்காரர் தாவா கோவிலுள்ள ஊருக்கு பிழைக்க வந்தவர் அதனால் பிழைக்க வந்தவருக்கு தாவா கோவிலில் உரிமை இல்லை என்று கூறுவது சரியல்ல என்றால் தவறு, திருப்பூந்துருத்தியில் 1–ம் பிரதிவாதிக்கு வீடே இல்லை, தஞ்சாவூரில் குடியிருக்கிறார். எந்த விலாசத்தில் குடியிருக்கிறார் என்றால் தெரியாது, வாடகை வீட்டில் வசித்து வருவதால் அவ்வபோது இடம் மாறிக்கொண்டே இருப்பார். வாசுதேவ பண்டாரம் வகையறாவில்

நான்மட்டும்தான் தாவா கோவிலுக்கு உரிமை கோருகிறேன் வேறு எவரும் உரிமை கோரவில்லை என்றால் எனது அப்பா மறைவிற்கு பிறகு நான்மட்டும் இருக்கிறேன் என்பதால் நான்தான் உரிமை கோருகிறேன்.

13) மேற்படி வசந்தா ஏற்கனவே இந்த வழக்கில் சாட்சி அளித்துள்ள விவரம் தெரியுமா என்றால் சாட்சியம் அளிக்கவில்லை. இதே வழக்கில் 4ம் பிரதிவாதியாக இருந்த வசந்தா என்பவர் அவரது முதல்விசாரணையில் 1—ம் வாதியின் தகப்பனார் துரைராஜ் மற்றும் கோவிந்தராஜ் இருவரும் தொழுநோயால் பாதிக்கப்பட்டு கும்பகோணம் துாய இருதய தொழுநோய் பிரிவில் சிகிச்சை பெற்று வந்தார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது பற்றி என்ன கூறுகிறேன் என்றால் அவ்வாறு கூறியுள்ளது தவறு. நான் வழக்குரையில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்திற்கும் கோவில் நிர்வாகத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும், வேண்டுமென்றே இந்த வா.சா.ஆ.22 முதல் வா.சா.ஆ.33 வரையிலான ஆவணங்களை என்வசம் வைத்துகொண்டே நீதிமன்றத்தில் ஏற்கனவே விசாரணையின்போது தாக்கல் செய்யாமல் காலம் கடத்த வேண்டும் என்ற எண்ணத்தில் காலதாமதமாக தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. தாவா கோவில் நிலத்தில் ஆக்கிரமிப்பாளர் என்ற முறையில் நான் வெளியேற்றப்பட வேண்டியவர் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

S.d/Muruganantham

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.04.28 17:50:57 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU